**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ம் நாள் திங்கட்கிழமை

**இ.பி.எண்.45/2023 அதன் அ.வ.எண்.408/2019**

சிரோன்மணி ... மனுதாரர்/ பிரதிவாதி

/எதிர்/

பகத்சிங் அகமது ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது 25.08.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.அப்துல் பாசித் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அபினேஷ் முருகேஷ் அவர்கள் ஆஜரானார். ஆனால் வாதுரை செய்ய முன்வரவில்லை. எதிர்மனுதாரர் தரப்பு வாதுரைக்காக கடந்த 18.06.2024 முதல் தற்போது வரை ஒத்தி வைக்கப்பட்ட போது அவரது தரப்பு வாதத்தை முன் வைக்கவில்லை. மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்டும் மற்றும் இரு தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## உத்தரவு

நிறைவேற்றுகை மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 35 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுவின் சுருக்கம்**

மனுவின் எதிர்மனுதாரருக்கு எதிராக செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருநெல்வேலியில் அ.வ.எண்.408/2019 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிரிடை கோரிக்கையில் விசாரணைக்கு பின்பு 20.02.2023 ம் தேதி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, மேற்படி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் அடிப்படையில் மனு தபசில் சொத்திலிருந்து எதிர்மனுதாரர்/வாதி காலி செய்து அதன் சுவாதீனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3) எதிருரை சுருக்கம்**

மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக எதிர்மனுதாரர் திருநெல்வேலி கூடுதல் சார்பு நீதிமன்றம், திருநெல்வேலியில் மேல்முறையீடு எண்.42/2023 தாக்கல் செய்து மேற்படி மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி அசல் வழக்கின் தீர்ப்பாணையின் மீது தடையாணை கோரி தாக்கல் செய்த இ.ம.எண்.2/2023 மனுவும் நிலுவையில் உள்ளது என்றும், எனவே, தற்சமயம் இந்த நிறைவேற்று மனுவை நிறைவேற்ற முடியாது என்றும், எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4). இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இரு தரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிறுத்தவில்லை.

5). **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

6). மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் வாதுரை செய்ய முன்வரவில்லை. எதிர்மனுதாரர் தரப்பு வாதுரைக்காக கடந்த

18.06.2024 முதல் தற்போது வரை ஒத்தி வைக்கப்பட்ட போது அவரது தரப்பு வாதத்தை முன் வைக்கவில்லை. நிறைவேற்றுகை மனுவானது 2023ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உச்சநீதிமன்றம் 06.03.2025ம் தேதி Civil Appeal No.3640 – 3642 /2025ல் Periyammal (Dead) Through Lrs and Ors –vs– V.Rajamani & Anr.ETC–ல் பிறப்பித்த உத்தரவிற்கிணங்க மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ROC.No.21393–B/2025/B5/Statistics பிறப்பித்த வழிகாட்டுதலுக்கு இணங்க நிறைவேற்றுகை மனுவை 6 மாத காலத்திற்குள் முடிக்க வேண்டும்.

6.1) ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரருக்கு எதிராக செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலியில் அ.வ.எண்.408/2019ல் தாக்கல் செய்த எதிரிடை கோரிக்கையானது கடந்த 20.02.2023ம் தேதி மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

7) இந்த மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண்.408/2019ல் தாக்கல் செய்த எதிர்கோரிக்கையானது கடந்த 20.02.023ம் தேதி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது இரு தரப்பிலும் ஒத்துக் கொள்ளப்பட்ட சங்கதியாகும். இந்நிலையில், மேற்படி மனு சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் ஆட்சேபணை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், நிறைவேற்றுதல் மனுவை மேல் நடத்த தடையாணை எதுவும் மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் எதுவும் பிறப்பிக்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

8) எனவே, நிறைவேற்றுதல் நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டு நீதிமன்றங்களால் அசல் வழக்கில் கோரிய எதிர்கோரிக்கையில்

பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்ற எந்தவிதமான தடையாணை பிறப்பிக்கப்படவில்லை என்பதாலும், எதிர்மனுதாரர் மனு தபசில் சொத்தை நீதிமன்ற உத்தரவிற்கு இணங்க மனுதாரரிடம் ஒப்படைக்காமல் இருந்து வருகிறார் என்பதாலும், நிறைவேற்றுதல் நீதிமன்றமான இந்நீதிமன்றம் அ.வ.எண்.408/2019 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு இணங்க மனு தபசில் சொத்தினை மனுதாரரிடம் மீட்டுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த நீதிமன்றத்திற்கு உள்ளது. அவ்வாறு மனு தபசில் சொத்திலிருந்து எதிர்மனுதாரரை காலி செய்து, அதன் சுவாதீனத்தை மனுதாரர் வசம் ஒப்படைவு செய்து கொடுப்பது தான் நீதியின் நலனுக்கும் சிறந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

***இறுதியில், இம்மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.*** **Delivery Batta in a week. Delivery on or before** ***15.09.2025. Call on 16.09.2025.***

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.08.25 19:31:52 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1). மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை
3). எதிர்மனுதாரர் தரப்பு, சான்றாவணங்கள் : இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.08.25 19:32:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

order uploaded in E-court on 25.08.2025.

முு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.பி.எண்.45/2023
அதன்
அ.வ.எண்.408/2019
வரைவு/சீரான உத்தரவு
நாள் – 25.08.2025.